REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 18உ புதன் (1—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 19உ வியாழன் (2—6—55) [இதழ் 300

சிதம்பரம் நடராஜருக்கு முத்தையா செட்டியார் அன்பளிப்பு

சிதம்பரம் நடராஜர் கோவில் 'மகா கும்பாபிஷேகத்' திற்காக, செட்டிநாடு ராஜா சர். எம். ஏ. முத்தையா செட்டியார் ரூ. 10,000 அன்பளிப்பு தந்திருப்பதாகத் தெரிகிறது.

மேலும், சிதம்பரத்தில் உள்ள தன் சத்திரத்தில், ஏராளமான 'யாத்ரிகர்'களுக்கு உணவளிக்கவும் ஏற்பாடுகளை அவர் செய்வாராம்!

ஜூன் 5-ல் துக்க நாளாம்!

—(:)—

அரசாங்க அலுவலகம் முன் மறியலாம்!

இந்திய குடியரசு தலைவர்—பிரதமரிடம் காவடியாம்!

பார்ப்பனர் படை திரளுகிறது!

'இந்து'வின் எண்ணம் ஈடேறிவிட்டது!

"சென்னை அரசாங்க அரிசன நல்வாழ்வுத் துறை வெளியிட்டுள்ள சுவரொட்டிப் படம் ஒன்று, தங்களுடைய ஜாதியினரை புண்படுத்துவதாக இருக்கிறதால், அதற்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில், பார்ப்பனர்களும், மற்ற இரு பிறப்பாளர்களும் ஜூன் மாதம் 5-ந் தேதியை துக்க நாளாக அனுசரிக்க வேண்டும்."

"தீண்டாமையைப் பார்ப்பனர்கள் மட்டுந்தான் அனுசரிப்பது சட்டப்படி குற்றமாகும்; மற்றவர்கள் அனுசரிப்பது குற்றமற்றது எனத் தவறுக உணர்ந்துகொள்ளக் கூடியவகையில் மேற்படி சுவரொட்டிப் படம் இருந்து வருவதால், 'அத்தகைய தவறுன எண்ணம் ஏற்பட விடாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்."

"மேற்படி சுவரொட்டி பார்ப்பனர்களுக்கு எதிராக அரிசனங்களைத் தூண்டி விடுவதாக இருக்கிறது—எனவே, பிரஸ்தாப சுவரொட்டியை உடனடியாக அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்."

மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீண்டாமை விலக்கு சட்டம், இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது. அந்தச் சட்டத்தின் உள்ளடக்கத்தை விளக்கும் வகையில் சென்னை அரசாங்கம் ஒரு சுவரொட்டிப் படத்தை வெளியிட்டிருக்கிறது. அப்படத்தில் ஒரு இரண்டு மனித உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வுருவங்களில் ஒன்றை 'எட்டி நில்' என ஆணையிடும் ஒரு உருவத்துக்குப் பூணூல் அணிவித்து இருக்கிறது.

அவ்வுருவம் 'பார்ப்பனன்' என்பது ஆங்கில இதழான 'இந்து'வின் முடிவு!

29—5—55-ல் வெளிவந்த 'இந்து' இதழில் அச்சுவரொட்டிப் படம் வெளியிடப்பட்டு இருக்கிறது.

அத்துடன், 'இந்து' அதே நாளில் காரசாரமான துணைத் தலையங்கம் ஒன்றும், மேற்படி சுவரொட்டியை வெளியிட்டதற்காக, சென்னை அரசாங்கத்தைக் கண்டித்து எழுதி இருக்கிறது.

'இந்து' சமிக்ஞை கிடைத்ததும், பார்ப்பன உலகம் விழித்துக் கொண்டது. சண்டமாருதம் என சென்னை அரசாங்கத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது!

அரசாங்கப் போக்கைக் கண்டித்து, ஏராளமானக் கடிதங்கள் வந்திருப்பதாகவும், அவைகளின் மூன்று கடிதங்களை மட்டுமே வெளியிடுவதாகவும், 'இந்து' பார்ப்பன எழுச்சியின் வேகத்தையும்—விரிவையும் சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறது!

31—5—55-ல், திருச்சியில், பார்ப்பனர்கள், கே. பாலசுப்ரமணிய அய்யர் எம் எல்.சி., தலைமையில் கூடினர். மேற்குறித்தத் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

"தீண்டாமை ஒழிப்புக்கு விரோதமாக பார்ப்பனர்கள் இருக்கிறார்கள் எனக் கூறுவது தவறுடையது; தீண்டாமை ஒழிப்புக்குச் சட்டமியற்றுவதை எப்பொழுதும் பார்ப்பனர்கள் எதிர்த்தது கிடையாது; ஒரு வகுப்பு வாத ஸ்தாபனம் போல அரசாங்கம் வகுப்புப் பகையை மூட்டும் செயலில் ஈடுபடக் கூடாது; பார்பனர்களும் ஒரு வகுப்பினர் என்ற முறையில் அரசாங்கப் போக்கிற்கு தங்கள் எதிர்ப்பைக் கூறவும், இத்தகைய அரசாங்கத்திற்குத் தாங்கள் வரி செலுத்துவது அறிவுடைமைதானு என்பதையும் ஆராய, அவர்களுக்கு உரிமை இருக்கிறது."

இவ்வாறு, பார்ப்பனர் கூட்டத்திற்குத் தலைமை வகித்த பாலசுப்பிரமணிய அய்யர், சென்னை அரசாங்கத்திற்கு அச்சமூட்டி இருக்கிறார்.

"மேற்படி சுவரொட்டியை சென்னை அரசாங்கம் திரும்பப் பெருவிடில் அரசாங்க அலுவலகத்தின் முன் மறியல் செய்வேன"

என, பார்ப்பன குல தளபதி சாபம் கொடுத்திருக்கிறார்.

மேற்குறிப்பிட்டுள்ள தீர்மானங்களுடன் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

குடியரசு தலைவர், பிரதமர் நேரு முதலியவர்களிடம் காவடி தூக்கிச் செல்லுவதென்றும், சிறுபான்மை சமூகத்தினருக்கு ஏற்பட்டுள்ள அநீதியைக் களைய பத்திரிகைகள் தங்களுக்கு ஆதரவு காட்டவேண்டுமென்றும், ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது!

நிலத்துக்கு உரமாகத் தேயிலை உபயோகம்?

இலங்கையில் தேயிலை உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. விலை மிகவும் குறைவாக விற்பதால் உபரி தேயிலையை எருவாக உபயோகிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

உத்பத்தி செலவுக்கும் குறைந்ததாகவே இப்போது தேயிலை விற்கப்படுகிறதாம். மார்க்கெட் நிலைமை அபிவிருத்தியடையும் வரை தேயிலை உற்பத்திக்காக பாடுபடுவதையும் நிறுத்த சிறு தோட்ட முதலாளிகள் தீர்மானித்துள்ளனராம்.

புனர் வாழ்விப்பு நிதி நிறுவனம், இடம் பெயர்ந்து வந்தோருக்கு 1955, மார்ச் இறுதி வரை அளித்துள்ள கடன் தொகைகள் மொத்தம் 943 21 இலட்சம் ரூபாய் ஆகும்.

கடலரிப்புக்கு பலியான அனுமான்

300 ஆண்டு பிள்ளையாரும் இடம் பெயரல்

இராமநாதபுரம், மே 30—

தனுஷ்கோடி கடலரிப்பிற்கு, கோடிக்கரையிலிருந்த அனுமார் சிலையும், 300 ஆண்டுகளாக வீற்றிருக்கும் பிள்ளையார் சிலையும் ஆளாகி பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

கடந்த மே 23-ந் தேதியன்று புயல் அடித்து, மழை பொழிந்த போது அனுமார் கோவில் வீழ்ந்துவிட்டதாம்.

300 ஆண்டுகளாயிருந்த சந்தான கணபதி கோவிலுக்கும் அதே கதிதான் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

இப்போது தகர்ந்த கடலரிப்புக்கு ஆளான அந்தக் கோவில்களிலிருந்த இரு சிலைகளும், வேறு ஒரு பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனவாம்!

250 கப்பற் படை போலீசார் உண்ணாவிரதம்

தொழிற்சங்கம் அமைத்த இருவரை நீக்கியதின் எதிரொலி

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கப்பற் படையில் கொந்தளிப்பு

கொழும்பு, மே 23—

இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் உள்ள, பிரிட்டிஷ் கப்பற் படைத் தளமான திரிகோணமலையில் இருக்கும் 'பிரிட்டிஷ் ராயல் கப்பற் படை' போலீசாரில் இருவர், தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்காக, வேலையிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து 250 போலீசார் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

போலீசார் வழக்கம்போல வேலை செய்ய முற்பட்டனர் என்றும், எல்லா வேலைகளையும் அவர்கள் செய்த போதிலும், உணவருந்த மட்டும் அவர்கள் மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது.

கப்பற் படைப் போலீஸ், நீயவனைக்கும் படையினர் ஆகியோருக்கான க்ஷேம நலக் குழு, போலீசாரின் பாதுகாப்பிற்காக உள்ளது என்றும், அதன் மூலமாகப் போலீசார் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும், இதர சங்கங்கள் அமைப்பது சட்ட விரோதமானதாகும் என்றும், கப்பற் படை அலுவலகம் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

இதைத் தெளிவாக அந்த இரு போலீசாருக்கும் தெரிவித்த பின்னரும், அவர்கள் உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுத்ததின் விளைவாகவே, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்றும்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட அந்த இரு போலீசாரும், புதியதாக உருவாக்கப்பட்ட ஊழியர்கள் சங்கம் ஒன்றின் தலைவராகவும், செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனராம்.

நீடிக்கும் இரயில்வே வேலை நிறுத்தம்

பிரிட்டனில் மூன்றும் முறையாக நெருக்கடி நிலை பிரகடனம்

லண்டன், மே 31—

பிரிட்டனில், இன்றிரவு நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றுவரும் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தைச் சமாளிக்கவே இந் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

ஜூன் 14-ந் தேதியன்று துவக்கப்படுவதாக இருந்த புதிய மக்கள் சபை, வரும் ஜூன் 9-ந் தேதியன்றே ராணியால் துவக்கி வைக்கப்படும் என்று தெரிகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள், நெருக்கடி நிலைப் பிரகடனத்தை மக்கள் சபை அங்கீகரிக்க வேண்டுமென்பதினுல்தான், இந்த ஏற்பாடு என்றும் தெரிகிறது.

ஸ்காட்லாந்தில், விடுமுறையைக் கழித்துக்கொண்டிருக்கும் ராணி எலிசபெத், நெருக்கடி நிலைப் பிரகடனத்தில் கையொப்பமிட்டிருக்கிறார்.

அத்தியாவசிய சப்ளைகள் அனுப்ப, பஸ் போக்குவரத்தினைப் பூரணமாக உபயோகித்துக்கொள்வதற்காக, ஈடன் சர்க்காருக்கு உதவும் வகையில் சில கட்டுப்பாடுகள் அகற்றப்படுகின்றன என்றும் தெரிகிறது.

நெருக்கடி நிலை காரணமாக, துருப்புகள் உதவிக்கு அழைக்கப்படமாட்டா என்றும் தெரிய வருகிறது.

தபால்களை நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்ல, ராணுவத்தினர் 250 லாரிகள் தந்து உதவுவர் என்றும் அவசியமான பொருள்கள் தங்குதடையின்றிப் போய்வருவதற்குத் தேவையான, குறைந்தபட்ச அதிகாரங்களையே சர்க்கார் மேற்கொண்டிருப்பதாகவும், அவசியம் நேர்ந்தால் மேலும் அதிகாரங்களைப் பெற சர்க்கார் முயற்சிக்கும் என்றும் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

இரண்டாம் யுத்தத்திற்குப் பிறகு இப்போது மூன்றும் முறையாக பிரிட்டனில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

முன்பு ஆட்லி சர்க்கார் பதவியிலிருந்தபோது துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக 1948, 1949-ல் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

மந்திரி சபையை மாற்றியமைத்த மருத்துவமனை வேலை நிறுத்தம்

5 நோயாளிகளையும் பலி கொண்டதாம்

சாந்தியாகோ (சிலி), மே 31—

நாடெங்கணுமுள்ள ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதின் விளைவாக நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு ஒரு மந்திரி சபை வீழ்ந்து புது மந்திரி சபை அமைந்திருப்பதுடன், 5 நோயாளிகள், கவனிப்பதற்கு ஆளில்லாமையால் இறந்துபட்டனர் என்றும் தெரிகிறது.

இந்த வேலை நிறுத்தம் 5 நாட்கள் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

தலைவர் கார்லோ ஒபெனெஸ், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிய சம்பளக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்களித்த பின் வேலை நிறுத்தம் முடிவுற்றதாகத் தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—6—'55 புதன்

சென்னை சர்க்கார் முயற்சிக்குமா?

'எஞ்சினீயரிங்' கல்வியில் பல துறைகள் உண்டு. அவற்றில், சிவில் துறை, மோட்டார் துறை, மின்சாரத் துறை என்பது போன்றே கப்பல் துறையும் ஒன்றுகும்.

தென்னாட்டில் — குறிப்பாக சென்னை மாநிலத்தில், எஞ்சினீயரிங் கல்வி பெறுவதற்கு விரல் விட்டு எண்ணக்கூடிய கல்லூரிகள் மட்டுமே உள்ளன. இந்தக் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்று வெளிவரும் நபர்களுக்கே, அவர்கள் பெற்ற நுணுக்கக் கல்வியறிவுக்குகந்த வேலை கிடைக்கவில்லை என்ற குறைபாடும் நாளுக்குநாள் வலுத்துவருவதாக அவ்வப்போது வெளிவரும் வேலையற்றோர் பட்டியல் தெரிவிக்கிறது.

வட நாட்டுடன் போட்டி போட்டுக்கொண்டு என்று இல்லாவிட்டாலும், கூறிப்பெருமை யடைவதற்கென்றேனும் பெரும் தொழிற்சாலைகள் ஒரு சிலகூட அமையாததின் விளைவுதான், விரல் விட்டு எண்ணக் கூடிய அளவு தொழிற் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் நுணுக்கக் கல்வி பெற்ற நபர்களுக்குக்கூட வேலை கிடைக்காமலிருப்பதற்குக் காரணம் என்பது வெள்ளிடைமலையாகும்.

பொதுவாகவே, நாம் மட்டும் தனித்து நின்று 'வட நாடு, தென்னாடு' என்று அறைகூவிக்கொண்டிருந்த நிலைமாறி, எந்த ஒரு கூடாரத்திலிருந்து எவரும் இப்படி எல்லாம் 'பிரித்து'ப் பேச மாட்டார்கள் என்று சிலர் எண்ணினர்களோ அந்த எதிர்பாராத கூடாரங்களிலிருந்தெல்லாம் 'இந்தியா' என்ற பேச்சு மாறி, 'வட நாடு—தென்னாடு' என்று பேசப்படுகிற நிலை இன்று வளர்ந்திருப்பதைக் காண்கிறோம்,

தொழில் துறையில், வேண்டுமென்றே தென்னாடு டில்லி ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை இன்று பலரும் உணர்ந்து, கண்டனக் குரல் எழுப்புவதைக் காண்கிறோம்.

கப்பல் கட்டும் தொழில் பற்றிய கல்வியறிவு புகட்டுவதற்கு, தென்னாட்டில் கல்லூரி ஒன்று கூடக் கிடையாது.

'கராச்சி போய்விட்டது' என்றதும், அந்த நஷ்டத்தை ஈடுகட்ட 'கண்டலா' என்ற ஒரு புதிய துறைமுகத்தை பல கோடி ரூபாய் செலவில் உருவாக்கினர்கள் — வட நாட்டு ஆட்சியாளர்! ஏற்கனவே துறைமுகங்களாக இருக்கும் பல தென்னாட்டு நகரங்கள் அவர்கள் கண்ணில் படவில்லை. அத்தகையோர் — 'கப்பல் கட்டு'ம் துறைமுகமே வட நாட்டில்தான் இருக்க வேண்டும்; ஒரு தூத்துக்குடியை ஏன் விரிவுபடுத்த வேண்டும்? தூத்துக்குடி, தமிழ்த் தென்றலடிக்கும 'தெற்கு' ஆயிற்றே! 'வடக்கு' அல்லவா வளர வேண்டும்?' —என்ற எண்ணங்கொண்ட டெல்லி ஆட்சியாளர், 'கப்பல் கட்டும் தொழில் பற்றிய கல்வியறிவு பெறும் கல்லூரியை மட்டும் தென்னாட்டில் துவக்க வேண்டும்,' என்று ஏன் எண்ணப் போகிறார்கள்? நாம்தான் எப்படி அவர்களிடம் அந்த நல்லெண்ணம் இருக்குமென எதிர்பார்க்க முடியும்?

இந்தியத் துணைக் கண்ட கடற்கரையின் சுற்றளவில் மிகப் பெரும் பகுதி தென்னாட்டைச் சேர்ந்தது; அத்தனை நீள கடற்கரையையும், எண்ணற்ற கப்பல் போக்குவரத்துடைய துறைமுகப்பட்டணங்களையும் கொண்ட தென்னாட்டில், கப்பல் துறை எஞ்சினீயரிங் கல்வி பெறுவதற்கென ஒரு கல்லூரிஇல்லாதது பெருங்குறை என்பதை வடநாட்டு ஆட்சியாளர் உணராமலிருப்பதிலாவது ஆச்சரியமில்லை, சென்னை மாநில சர்க்கார் இது குறித்து உணராமலிருப்பதுதான் ஆச்சரியத்திற்குரியதல்ல — வேதனைப்படுதற்குரியது!

பம்பாயிலும், கல்கத்தாவிலும், அத்தகு எஞ்சினீயரிங் கல்லூரிகள் இருக்கின்றன.

தென்னாட்டு மாணவர்கள், கப்பல் துறை எஞ்சினீயரிங் கல்வி பெற வேண்டுமானல், அந்த வடநாட்டுக் கல்லூரிகளுக்கு ஓடவேண்டும்; அப்படி ஓடினலும், அந்தக் கல்லூரியில் இடம் கிடைப்பதில் எத்தனை இன்னல்களோ! சுலபத்தில், தென்னாட்டவர்க்கு இடம் தந்து விடுவார்களா, என்ன?

எனவே, எல்லாத் துறைகளிலும் பின் தள்ளப்பட்டுக் கிடக்கும் தென்னாட்டு மக்களின் எதிர்கால நலன் கருதியேனும், சென்னையில், கல்கத்தா—பம்பாயில் உள்ளது போன்று, கப்பல் துறைக் கல்விக்கென ஒரு எஞ்சினீயரிங் கல்லூரி துவக்க வேண்டும்.

அதற்கான முயற்சிகளை, இதுவரை மேற்கொள்ளாவிடினும், இனிமேலாவது சென்னை சர்க்கார் முயற்சிக்க வேண்டும்.

வாழப் பிறந்தவர்கள் வாழ்கிருர்கள்!

தென் கிழக்கு ஆசியாவில், சிங்கப்பூரில்தான் மக்களுடைய வருமானமும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்திருக்கிறதாம்!

சுகாதாரம், கல்வி, குடியிருப்பு வசதி, சமூக நலன், வியாபாரம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் முந்திய ஆண்டைக் காட்டிலும் கணிசமான அளவில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதாம்; நபர் சராசரி வருமானமும் அதிகரித்திருக்கிறதாம்.

தீவிர நாகர்கள் கைது

பர்மியப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட 64 பேர்களில், தீவிர நாகர் 14 பேர் மேல் விசாரணைக்காக பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 50 பேர் நல்ல நடத்தையோடு இருப்பதாக உறுதிமொழி தந்ததின் மேல் விடுதலை செய்யப்பட்டு, டுயென்சாங் வட்டாரத்தில் குடி வைக்கப்பட்டுள்ளனர். இவ்வட்டாரத்திலிருந்துதான் இவர்கள், முன்பு பர்மாவுக்குத் தப்பியோடியவர்களைப் பிடிக்க பர்மிய இராணுவம் இந்திய அரசாங்கத்துக்கு உதவி புரிந்தன.

மதுவிலக்கை நிரம்பட அமுல்செய்ய

காங்கிரசின் கருத்தைதிட்டக் குழு கேட்கிறது

பாட்டியாலா, மே 30—

அரசாங்கத்தின் மதுவிலக்குக் கொள்கைக்கு எதிர்ப்பைப் பலப்படுத்தும் பொருட்டு, சிலர் தமது செல்வாக்கையும், செல்வத்தையும் உபயோகித்து வருவதை எதிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்பது பற்றியும், மதுவிலக்கு காரணமாக ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்து மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்களைச் சரிப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்பது பற்றியும் யோசனை கூறுமாறு திட்டக் குழுவின் மதுவிலக்கு விசாரணைக் குழு எல்லா பிரதேச காங்கிரஸ் குழுக்களையும் கேட்டிருக்கிறதாம்.

மதுவிலக்கை அமுல் நடத்துவதால் வேலை இழக்கக்கூடியவர்களுக்கு மாற்று வேலைகள் தருவது பற்றியும், தீவிரமாக மதுவிலக்குப் பிரச்சாரம் நடத்த வேண்டிய விதம் பற்றியும் கருத்தறிவிக்குமாறும் பிரதேசக் காங்கிரஸ் தலைவர்களைக் கேட்டிருக்கிருர்களாம்.

இளஞ் சிருர்களுக்கு!

கட்டாய ஆரம்பக் கல்வி

பூனா, மே 30—

6 வயது முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாய ஆரம்பக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்றும், கட்டாய ஆரம்பக் கல்வியை தேசியப் பிரச்சினையாகக் கருதி அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி அதற்கு முதல் இடம் தரவேண்டும் எனக்கோரி, ஆரம்பக் கல்வி 'போர்டு' ஒன்று நிறுவவேண்டும் என்று சர்க்காரை வற்புறுத்துவதற்காகக் கூடிய அகில இந்திய ஆரம்ப ஆசிரியர் சம்மேளனக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளதாகத் தெரிகிறது.

'நடுநிலைமை' நாடுகளுக்கு!

அமெரிக்க உதவி குறையுமாம்

எந்த ஒரு வல்லரசுக் குழுவிலும் சேராமல், 'நடு நிலைமை' வகிக்கும் நாடுகளுக்கு, அமெரிக்கா, இந்த ஆண்டு, தான் தந்து வரும் டாலர் உதவியைச் சுருக்கிக்கொள்ள முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

"யூகோ ஜனதிபதி மார்ஷல் டிட்டோவுக்கும் — ரஷ்ய சர்க்காருக்குமிடையில் மீண்டும் நேச உறவு ஏற்பட்டால், இந்தியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுடன் யூகோவும் சேர்க்கப்பட வேண்டியிருக்கும்," என்று குறிப்பிடப்படுகிறது.

'டில்லியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன'

'மக்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கவில்லை!'

ஜெயப்பிரகாஷ் நாராயண் தரும் கருத்து

"இப்போது அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருப்பதை மாற்றி, பரவலாக்கப்பட வேண்டும்; அப்போதுதான், கிராமக் குடியரசுகள் உருவாக அது உதவியாயிருக்க முடியும்,"

"நாடு விடுதலை பெற்றிருந்தாலுங்கூட, மக்களுக்கு இன்னும் உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லை; அந்தச் சுதந்திரம் மக்களிடமிருந்து வெகுதூரத்திற்கப்பால் விலகி நிற்கிறது."

"விடுதலை, புதுடில்லியில் அதிகாரங்களைக் குவித்திருக்கிறது; ஆகையால், உண்மையான சுதந்திரம் இலட்சக்கணக்கான கிராமங்களிலும் நகரங்களிலும் பிரதிபலிக்கவில்லை,"

—என்று, ஜெயப்பிரகாஷ் நாராயண், பம்பாயில், தொழிலாளர் நல நிறுவனம் ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் சபையில் சட்டம் நிறைவேற்றுவதாலேயே கிராமக் குடியரசுகள் தோன்றிவிட முடியாது. மக்கள் கிளர்ச்சிக்கு—போராட்டத்திற்குப் பிறகுதான் அவை தோன்ற முடியும்—அமைக்கப்பட முடியும்; எனவே, மக்கள் இந்த நிலையை தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்

"நான் அரசியலிலிருந்து விலகி ஓய்வு பெற்றுக் கொண்டதற்குக் காரணம், அரசியல் ஆர்ப்பாட்டங்களால், மிகக் கீழான நிலையில் தள்ளப்பட்டிருக்கும் மக்களை முன்னேற்றத் தவறிவிட்டேன்; இந்த லட்சியத்தை 'பூதானம்' என்ற எனது புதிய நம்பிக்கையால்—கொள்கையால் நிறைவேற்றுவேன்."

ஆண்களைவிட அதிகமான பெண்கள்

பிரான்சின் மக்கள் தொகை விவரம்

1954-ம் ஆண்டு கணக்கிட்டபடி, பிரான்சின் மக்கள் தொகையில், ஆண்களைக் காட்டிலும் பெண்கள் 17,47,000 பேர் அதிகமிருக்கின்றனராம்.

ஆனல், இப்போது அதிகமான ஆண் குழந்தைகள் பிறந்துவருவதாகவும், 15 வயதிற்குஉட்பட்டவர்களில், பெண்களைக் காட்டிலும் 81,000 ஆண்கள் அதிகமிருப்பதாகவும் தெரியவருகிறது.

பிரான்சின் மொத்த மக்கள் தொகையான 4,29,47,000 பேரில் பாதிக்கு மேல் திருமணமானவர்கள் என்றும், இதுவரை சுமார் 50 இலட்சம் பேர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும், 1960-ல், பிரான்சின் மொத்த மக்கள் தொகையில் பாதிக்கு மேல் 65 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருப்பர் என்றும் கணக்கிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மருத்துவ மனைகளில் படுக்கைகள் இரட்டிப்பாகுமாம்!

ஐந்து ஆண்டு திட்ட கால ஏற்பாடுகள்

சென்னை, மே 30—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் உள்ள எல்லா மருத்துவமனைகளிலும், இப்போது இருப்பதைப் போன்று இருமடங்கு படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிருக்கின்றனவாம்

தீராத நோயாளிகளை, நகர, மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலிருந்தும், தனி விடுதிகளுக்கு மாற்றும் திட்டமும் இதில் இடம் பெறக்கூடுமாம்.

தேசிய விஸ்தரிப்புத் திட்ட பகுதிகளில் மேலும் 200 ஆரோக்கிய நிலையங்கள் திறக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

இரண்டாம் திட்டத்தில் சுகாதாரத் திட்டங்கள்

புதுடில்லி, மே 30—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவிருக்கும் சுகாதார திட்டங்களை அமுல் நடத்த மொத்த முதலீடு ரூ. 208 கோடி ஒதுக்கப்படும் என்று அறியப்படுகிறது.

எத்தனை நாளைக்கு?

போதிய அளவு நிதி நிலை இல்லாததால் கிராம அதிகாரிகளின் சம்பள உயர்வு ஒத்திவைக்கப்பட்டிருந்ததாகவும், இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கொண்டால், சம்பள உயர்வு கிடைத்துவிடுமெனவும், கடலூர் கிராமாதிகாரிகள் மாநாட்டில் ஸ்தலஸ்தாபன மந்திரி தெரிவித்திருக்கிறராம்.

கனரக தொழிலை

கவனிக்க மந்திரி சபை குழு

புதுடில்லி, மே. 30—

இரும்பு, எஃகு உற்பத்திக்கென தனி மந்திரி சபை இலாகா தோற்றுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பதை ஒட்டி, சர்க்கார் துறையில் கனரகத் தொழில் வளர்ச்சிக்கு தொடர்புடைய எல்லோரின் ஒத்துழைப்பையும் பெறுவதற்காக, கனரகத் தொழிலுக்கென மந்திரி சபைக் குழு ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

செயலாளர்களின் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாயும், அந்தக் குழு ஒத்துழைப்பைப் பெறுவது குறித்து, நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும், இப்படி இரண்டு குழுக்கள் உருவாகி விட்ட பிறகு இரும்பு, எஃகு உற்பத்திக்கென்றிருக்கும் மந்திரி சபைக் குழு தேவை இல்லை என்று கருதப்படுவதாகவும் தெரிய வருகிறது.

தமிழர்களை மயக்கும் போக்கு?

தத்தாரின் தமிழ்க் காதல்

"நீங்கள் எனக்களித்த வரவேற்புக் கண்டு மகிழ்வுற்றேன்; அந்த வரவேற்பு தமிழ் மொழியில் தரப்பட்டிருந்தால் மிகவும் நன்றாயிருந்திருக்கும்!"

"எந்த ஒரு பிறமொழியினரும் எளிதாகக் கற்றுக் கோள்ளத் தக்க எளிமையான மொழியாகும் தமிழ் மொழி; அமைச்சர்கள் யார் வந்தாலும்—ஏன்—இந்தியக் குடியரசுத் தலைவரே வந்தாலும் அவர்களுக்கு நீங்கள் வரவேற்புத் தருவதாயிருந்தால், அந்த வரவேற்பைத் தமிழ் மொழியிலேயே வாசித்துக் கொடுங்கள்; அப்போது அவரும் மகிழ்ச்சியடைவார்; தமிழ் மக்களும் மகிழ்ச்சியடைவர்,"

—என்று, மத்திய அரசாங்க உள்நாட்டுத் துறைத் துணை மந்திரி பி. என். தத்தார் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வத்தலகுண்டு கூட்டுறவு பால் பண்ணை, கூட்டுறவு கழகம் ஆகியவற்றின் சார்பில் அவருக்கு ஆங்கிலத்தில் வரவேற்புரை வழங்கப்பட்டது. இந்த வரவேற்புரைக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ராகி சாகுபடி

நடப்பு ஆண்டில் 57,47,000 - ஏக்கராவில் ராகி சாகுபடி செய்யப்பட்டுள்ளதென்றும், மொத்தம் 17,78,000 டன் உற்பத்தியாகுமென்றும் தெரிய வருகிறது.

‘ஜனநாயக ஆட்சியில் ஆளுக்கோர் சட்டமா?’

‘மட்டரகப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தாதது ஏன்?’

சினிமா நடிகர் சங்க தலைவர் கேள்வி

“‘மக்களின் நலனைக் கருதி செய்யப்படும் கட்டுப்பாடுகள்’ என்ற போர்வையின் கீழ், பொழுதுபோக்கு சாதனங்களான சினிமா இசைத் தட்டு, நாடகம், சினிமா இவைகளைக் கட்டுப்படுத்த முன்வந்த ஜனநாயக சர்க்கார், மக்களுக்குத் தீமை விளைவிக்கும் ‘மட்ட ரக’—மஞ்சள் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த முன்வராததும், கட்டுப்படுத்தும் சட்டங்கள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தாததும் விசித்திரமாகவே இருக்கிறது; ‘மட்ட ரக’ப் பத்திரிகைகளினால், மக்களின் அறிவு, வளர்ச்சி அடையுமென்று எண்ணத் துணியமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.”

“ஜனநாயக அடிப்படையில் இயங்கிவரும் அரசாங்கத்தில், ‘அரசனுக்கு என்று ஒரு சட்டம்; ஆண்டிக்கு என்று ஒரு சட்டம்,’ இருப்பதற்கில்லை; அப்படியிருந்தால் அது வெறுங் கேலிக் கூத்துதான்!”

—இவ்வாறு, தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் தோழர் டி. வி. சுந்தரம் அவர்கள் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் அவர் கூறுகிறார்:—

“சமீப காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் சில ‘மட்டரக’மான பத்திரிகைகள் (பத்திரிகை உலகிற்கே அவமானச் சின்னமாக விளங்கும் ‘புரட்டுச் செய்தித் தாள்’ என்று அழைப்பது மிகவும் பொருந்தும்) பொது மக்களையும், குறிப்பாக நடிக—நடிகைகளையும் பற்றியும் தகாத முறையில்—ஆதாரமற்ற—கீழ்த்தரமான — குறும்புத்தனம் மிகுந்த செய்திகளைப் பிரசுரித்து, மக்களிடையே துர்ப்பிரச்சாரம் செய்து வருவது மலிந்துவிட்டது. அவதூறு விளைவிக்கக் கூடிய—கேவலமான செய்திகளை வெளியிட்டதற்காக, சம்மந்தப்பட்டவர்கள், நீதிமன்றங்களுக்குச் சென்று பரிகாரம் தேடிக்கொள்ளலாமென்றாலும், நடிப்பையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு, இந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த அவகாசமோ, வசதியோ கிடைப்பதில்லை. நீதிமன்றங்களுக்குச் சென்று அவர்கள் வழக்காடுவதில் உள்ள சிக்கல்களையும், வசதியின்மையையும் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கும் ‘மட்டரக’ப் பத்திரிகைகள், தங்கள் குறும்புத்தனமான பிரச்சாரத்தை தங்கு தடையின்றி நடத்துகிறார்கள்.

இவ்வாறான பிரச்சாரத்தை—பொறுப்பற்ற முறையில்—நாணயத்திற்குப் புறம்பான நாகரீகமற்ற செய்திகளை வெளியிடுவதை, பொறுப்புவாய்ந்த அரசாங்கம் ஏன் கவனியாமல் அசட்டையாக இருக்கிறது என்பதுதான் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக உள்ளது.

“வானொலியில் சினிமாப் பாட்டுகளை அதிகம் ஒலிபரப்பினால், அவற்றைக் கேட்டு மகிழும் மக்கள் பாதிக்கப்படுவர் என்பதை ஒரு காரணமாகச் சுட்டிக்காட்டி, சினிமா இசைத்தட்டு ஒலி பரப்பை குறைத்துவரும் சர்க்காருக்கு—மனிதருக்கு மிருக உணர்ச்சியை ஊட்டக்கூடிய செய்திகளை வெளியிட்டு, பாமரர்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் பத்திரிகைகள் கண்களில் படாமல் போவது வியப்பாகவே இருக்கிறது.

“சில நாடகங்களை நடத்தினால் மக்களின் மனம் புண்பட்டுவிடும் என்று கருதி, நாடகத் தடை மசோதா ஒன்றையே நமது சர்க்கார் நிறைவேற்றவில்லையா? நாடகங்களைத் தடையும் செய்யவில்லையா? ‘மஞ்சள் பத்திரிகை’களின் குறும்புத்தனமான செய்திகளினால் மனம் புண்படும் நடிக - நடிகைகளும், மக்கள்தானே? கவுரவம் வாய்ந்த மானிடப் பிறவிகள் தானே? இல்லையென்று சர்க்கார் கருதுகிறார்களா?

“‘சினிமாப் படங்களினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்—எனவே, தணிக்கை முறையைக் கடுமையாக்க வேண்டும்,’ என்று, பதவியிலுள்ளவர்கள் வலியுறுத்தவில்லையா—லீலாவதி-முன்ஷி அம்மையார் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தையும், மக்கள்சபை அங்கீகரிக்கவில்லையா?

“மக்களின் நலனில் சர்க்காருக்கு உண்மையான ஆர்வமிருந்தால், ‘மட்ட ரக’ப் பத்திரிகைகளை ஒழித்துக்கட்டுவதிலும் அவர்கள் முனைய வேண்டும்—தீவிர நடவடிக்கையெடுக்க வேண்டும்; சர்க்கார் இதை கவனிப்பார்களென்று நம்புகிறேன்.”

தென்னிந்திய நடிகர் சங்கம்

பெண் உறுப்பினர்கள் பொதுக் கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

20—5—55 மாலை 6 மணிக்கு, தோழியர்எஸ். ஆர் ஜானகி தலைமையில், மேற்படி கூட்டம் நடைபெற்ற போது, சமீப காலமாக பொது மக்களில் சிலரையும், குறிப்பாக நடிக - நடிகைகளைப் பற்றியும், கீழ்த்தரமான முறையில் செய்திகளை வெளியிட்டுவரும் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த சர்க்கார் உடனடியாக முன்வரவேண்டுமென்றும், இதுபோன்ற ‘மஞ்சள் பத்திரிகைகளை’ ஒடுக்க அகில இந்திய பத்திரிகையாளர் சம்மேளனமும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும்கேட்டுக்கொண்டதுடன், மேனாடுகளில் இருந்து வரும் வழக்கத்தை ஒட்டி, நம் நாட்டிலும் இரவு 10 மணிக்கு மேல் படப்பிடிப்பு நிறுத்தப்படவேண்டுமென்றும், குறிப்பாக நடிகைகளுக்கு இரவு 10 மணிக்கு மேல் படப்பிடிப்பு வைத்துக்கொள்ளவேண்டாமென்று படத் தயாரிப்பாளர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நடைபெற்ற விவாதத்தில், பல நடிகைகள் பங்கு பெற்றனர்.

வீண் செலவாம்!

“இந்திய சட்டசபைகளில் மேல் சபைகள் முற்றிலும் அனாவசியமானவை; அவற்றால் ஏற்படும் செலவு வீணானவை ஆகும்,” என்று, சென்னை சட்டசபையின் முன்னாள் காரியதரிசி ஆர். வி. கிருஷ்ணய்யர், கலாச்சாரக் கழகம் மொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேல் சபைக்குக் கீழ் சபையினர் ‘கடிவாளம்’ போட வேண்டுமாம்!

அதே கழகத்தில் பேசிய நீதிபதி கோவிந்தமேனன் கூறினார்:—

“மேல்சபைகள் இருப்பதில் சில அனுகூலங்கள் உண்டு; ஆனால், அதன் அமைப்பு, கீழ் சபையினுடையதைப்போல்இருக்கக்கூடாது; முதிர்ந்த அனுபவமும், பாரபட்சமற்ற மனப்பான்மையும் உள்ளவர்களாக மேல் சபையினர் இருக்க வேண்டும்; கீழ் சபைக்குக் ‘கடிவாளம்’ போடும் நிறுவனமாக மேல் சபை இருக்க வேண்டும்.”

பாக் ஒற்றுமைக்கு உலை?

சதி செய்ததாகப் பலர் மீது குற்றச்சாட்டு

லாகூர், மே. 30—

பாகிஸ்தானின் ஒற்றுமைக்கு உலை வைப்பதற்காக முன்னாள் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் சிலர், முன்னாள் மாகில மத்திய அரசாங்க அமைச்சர்கள் சிலர் ஒன்றுகூடி சதி நடத்தியது பற்றி போதிய ஆதாரங்கள் பாகிஸ்தான் துப்பறியும் போலீசாருக்குக் கிடைத்திருக்கின்றனவாம்.

மேற்கு பாகிஸ்தானுக்கு எதிராக, சதியிலீடுபட்டவர்களில், பகவல்பூரின் முன்னாள் முதன் மந்திரியான சையத் உசேன் முகமது என்பாரும் இடம் பெற்றிருப்பதாக இங்கு வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகின்றது.

இரண்டு மாத காலம் பல நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியபோது, கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில், பகவல்பூர் முதன் மந்திரியாயிருந்த சையத் உசேன் முகம்மது, ‘பாகிஸ்தானின் கௌரவம் சீர்குலைந்துவிட்ட’தாகக் கூறியதும், அதைத் தொடர்ந்து பகவல்பூர் மாகில சட்டசபை கலைக்கப்பட்டு ஒரு ‘காபந்து’ சர்க்கார் ஏற்பட்டதும் கவனத்திற்குரியன.

நாடு கடத்தப்பட்டார்

திபெத்திலிருந்து முன்புவானொலியை இயக்குபவராக இருந்த பிரிட்டிஷ் குடிமகனான ராபர்ட் வெப்ஸ்டர் போர்ட், ஒற்று வேலை பார்த்த குற்றச்சாட்டினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. சிறைத்தண்டனை காலம்முடிவடைவதற்கு முன்பாக சீன அரசாங்கம் அவரை நாடு கடத்திவிட்டதாகத் தெரிகிறது.

தாம் செய்த குற்றங்களுக்காக, தம்மை மன்னிக்கும்படி கோரி சிறையிலிருந்தபோது வருத்தம் தெரிவித்திருப்பதை யொட்டி சீன உயர் நீதிமன்றத்தின் இராணுவ நீதிமன்றம் இவரை விடுதலை செய்வதை ஏற்றுக் கொண்டதாம்.

உங்கள் குறிப்புக்கு!

ஜூன் 21—26 தேதிகளில், லண்டனில் நடக்கும் இந்திய திரைப்பட விழாவில், சாந்தாராம், அப்பாஸ், ஷோராப் மோடி தம்பதிகள் ஆகியவர்கள் கலந்துகொள்வார்கள்.

விழாவில் பின்வரும் 6 படங்கள் திரையிடப்படும்:—

‘ஜான்ஸி ராணி’ (ஷோராப் மோடி தயாரிப்பு); ‘முன்னா’ (அப்பாஸ்); சாந்தாராமின் ‘அமார் பூபாலி’; (‘தோபிகா ஜமீன்’); ‘பர்னீதா’; ‘பாப்லா’.

கிம்மி, நிருபாராய், மீனாகுமாரி, சிதாரா, மேதாப் முதலிய திரைப்பட நட்சத்திரங்களும் விழாவில் கலந்துகொள்கிறார்கள்.

விழாவில் கிடைக்கும் நிகர வருமானம் உலக பல்கலைக் கழகப் பணிக்கும், தேசியப் புற்றுநோய் நிவாரண நிதிக்கும் வழங்கப்படும்.

கல்லூரி தலைவர்களுக்குப் புதிய உத்தரவு

சென்னை, மே 31—

பின்தங்கிய வகுப்பின் சில பிரிவுமாணவர்களை—அவர்கள் உபகாரச் சம்பளம் பெறுமுன்பாக, முன்கூட்டியே கல்லூரி சம்பளம் பெறாமல் தொழில் கல்லூரிகளிலும், கலைக் கல்லூரிகளிலும் அனுமதிக்கும்படி கல்லூரித் தலைவர்களுக்கு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அன்பளிப்பு

மதுரை மத்திய வட்டார ‘ஜே என். இராமநாதன் நினைவுப் படிப்பக’ செயற்குழு உறுப்பினர் கே. எஸ். சல் அவர்களின் துணைவியார் 26—5—55ல், ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். அதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

கிராமக் கைத் தொழில்கள் புத்துயிர் பெறுமா?

சிறு தொழில்கள் அபிவிருத்திக்கு நிதி உதவி

கிராமத் தொழில்களையும், சிறு தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்காக, இந்திய சர்க்கார் மேற்கொண்டு சகாயத் தொகைகளும், கடனும் வழங்கியிருக்கின்றனர்.

கிராமத் தொழில்களுக்காக விசேடமாகப் பணம் ஒதுக்கப்படுகிறது. தீப்பெட்டி உற்பத்தி, மட்பாண்டங்கள் உற்பத்தி, தேனீ வளர்ப்பு ஆகிய குடிசைத் தொழில்களும் இக்கிராமத் தொழில்களில் அடங்கியுள்ளன.

அகில இந்திய காதி, கிராமத் தொழில்கள் போர்டால் நேரிடையாக நடத்தப்படும் உற்பத்தி - விற்பனை நிலையங்கள், விற்பனைக் காட்சிசாலைகள், பந்தர்கள் ஆகியவற்றின் மூலமாக, கிராமத் தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை நடப்பு நிதி ஆண்டு இறுதிவரை, வியாபாரம் செய்துவருவதற்காக, முன் பணமாக 15 இலட்சம் ரூபாய் அந்த போர்டுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

தீப்பெட்டி உற்பத்திக் குடிசைத் தொழிலுக்காக போர்டுக்கு ரூபாய் 3,25,000 கடனாகவும் ரூபாய் 1,18,800 மானியமாகவும் கிடைத்திருக்கிறது. கடன் தொகையில் பெரும் பகுதி, மூடப்பட்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்காகவும், புது தீப்பெட்டி உற்பத்திசாலைகளை ஆரம்பிப்பதற்காகவும், 150 கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் அளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 150 தீப்பெட்டி தொழிற்சாலைகளில் சாதனங்கள் அமைப்பதற்காகவும், தொழில் பயிற்சி அளிப்பதற்காகவும், இம் மானியத் தொகை பயன்படுத்தப்படும்.

கிராம மட்பாண்ட உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக போர்டுக்கு ரூ. 2,09,800 மானியமாகவும், ரூ. 1,90,000 கடனாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

20 பொது தொழிற்கூடங்களைக் கட்டுவதற்காக, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் ரூ. 90,000 - கடனும், அத்தொகையளவில் மானியமும் கொடுக்கப்படவிருக்கிறது. மட்பாண்டங்களை விற்பனை செய்வதற்காக-அவைகளை விலைக்கு வாங்க, அந்த நிறுவனங்களுக்கு ரூ. 1 லட்சம் கடனாக அளிக்கப்படவிருக்கிறது.

தேனீ வளர்ப்புத் தொழில் அபிவிருத்திக்காக, போர்டுக்கு ரூ - 1,95,000 மானியமாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இத் தொகை, மேற்கொண்டு 50 உப நிலையங்களை நிர்மாணிப்பதற்காகவும், கூடுதலாக ஐந்து பிரதேச அலுவலகங்களை அமைப்பதற்காகவும், தொழில் பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்படும்.

நாட்டின் பல பாகங்களில், 1955—56ல், கதர், கிராமத் தொழில் பொருட்காட்சி சாலைகளை நடத்துவதற்காக ரூ. 4,67,360 - போர்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக, அசாமுக்கு ரூ. 2,50,000 - கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

க. அன்பழகன் சொற்பொழிவுகள்

★

திருப்பத்தூர்: (வ. ஆ.)

இக்கர் சந்தைவெளியில், தி.மு. கழகச் சார்பில் 22—5—55 மாலை 6½ மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. பி. இராசாபாதர் தலைமை வகித்தார். தோழர்கள் ந. முருகன், என். ஏ. சாமி, எம். நடேசன் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள், தி. மு. கழகத்தின் பணியையும், போராட்டத்தையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினார்.

திருப்பத்தூர்: (வ. ஆ.)

இக்கர், கடைத் தெரு, ஔவை நூல் நிலையம், தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு 22—5—55 மாலை 4½ மணி அளவில் ஓர் வரவேற்பு அளித்தனர். தோழர் டி. ஆர். இராமச்சந்திரன் தலைமை வகித்தார். தோழர் க. அன்பழகன் வரவேற்பைப் பெற்றுக்கொண்டு பதிலளித்ததோடு, திருக்குறளின் மாண்பையும், அதைத் தமிழகம் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும் விளக்கிப் பேசினார்.

நங்கவள்ளி: (சேலம்)

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் 23—5—55 மாலை 6½ மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் தோழர் கோ. ல. நரசிம்மன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், பி. சீனிவாசன், புதுமைவாணன் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள், கழக இலட்சியங்களை விளக்கி விரிவாகப் பேசினார். அவருக்கு நங்கவள்ளி, ஆரப்பள்ளி, வனவாசி, சலகண்டபுரம், தி. மு. கிளைகளும், வனவாசி பாண்டியன் நாடக மன்றமும் நூல் மாலைகள் அணிவித்தன.

திருமணங்கள்

29-5-55 காலை 9-30 மணிக்கு அரிசிபாளையத்தில் தோழர் கே. எம். ராசமாணிக்கம் — தோழியர் கமலா திருமணம் தோழர் ஆர். நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இ. ஆர். கிருஷ்ணன், பி. கே. வரதராசலு, எம். சி., பாராட்டுரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ இதழுக்கு ரூ. 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

25—5—55 இரவு 11 மணிக்கு, அருப்புக்கோட்டை சிவசுப்பிரமணியம் வீதியில், தோழர் ச. அ. முத்துச்சாமி தலைமையில் தோழர் துரைசாமி — மாரியம்மன் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் கு கணபதி, எம். எஸ். இராமசாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி - பொறுப்பாளர்.

* * *

26—5—55ல், நன்னியூரில், தோழர் டி. ஆர். முத்துசாமி தலைமையில், தோழர் என். வி. கோவிந்தன் — தோழியர் வள்ளியம்மை சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம —நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

10—5—55ல், சலகண்டபுரம் தி. மு. க. செயலாளர் தோழர் இரா. சமதர்மம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஜீவரத்தினம் மான் ஓர் ஆண்மகவுக்கு தாயானார்; 26—5—55ல், அம்மகவுக்கு ‘அன்பரசன்’ எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு வழங்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கோவா விடுதலைப் போர் பற்றிய விபரங்கள்

கோவா எல்லை, மே 31—

கோவா போலீசாரின் மிருகத்தனமான தாக்குதலுக்கும், அடக்குமுறைக்கும் ஆளான அறப்போர் வீரர்கள் 65 பேர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், 27-ந் தேதியன்று கோவாவிற்குள் நுழைந்த அறப்போர் குழுத் தலைவர் லிமாயி விடுதலை செய்யப்பட்டாரா என்பது தெரியவில்லை.

முதல் குழுவில் சென்ற தோழர்கள் பற்றி, கோரே உட்பட, யாதொருவித தகவலும் தெரியவில்லை. இன்னும் அவர்கள் குண்டு காயங்களால் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

100 பேரடங்கிய மற்றுமொரு குழு, தோழர் சின்னப்பா வாலி என்பவர் தலைமையில், கோவா அறப்போரிலீடுபட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கொல்லப்பட்டார் !

நேற்று முன்தினம் கோவாவில் கோலிகான் கிராமத்தில் உள்ள ஒரு போலீஸ் சாவடியை, சுதந்திரப் போராட்ட ரகசிய வீரர்கள் தாக்கியதின் விளைவாக ஒரு போலீஸ்காரர் கொல்லப்பட்டதாக தகவல் கிடைத்திருக்கிறதாம்.

‘குண்டு வீச்சு’

பூனு, மே. 31—

வரும் ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் சுதந்திர தினத்தன்று, கோவா எல்லைக்குள், போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு எதிராக புரட்சி செய்யுமாறும், கோவாவிற்குள் வரும் அறப்போர் வீரர்களை வரவேற்குமாறும் கோரும், துண்டுப் பிரசுரங்களும், பத்திரிகைகளும் விமானத்திலிருந்து வீசப்படுமென்றும், அன்றையதினம் சுமார் 5,000 அறப்போர்வீரர்கள் கோவாவிற்குள் நுழையத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சுதந்திரம் கைப்பற்றப்பட வேண்டும்

ஆஸ்திரேலியாவில் இந்தியத் தூதுவராக இருந்த டாக்டர் ஆர். பி. பரான்ஜிபே, கூட்டமொன்றில் பேசுகையில், போர்ச்சுகீசியரிடமிருந்து கோவாவிற்கு சுதந்திரம் தட்டிப் பறிக்கப்படவேண்டும் என்றும் அதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

வேண்டுகோள் !

போர்த்துகீசியப்படையின் முன்னாள் அதிகாரிகளுள் ஒருவரான அந்தோணி டி. சில்வா என்பவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், கோவாக்காரர்கள் அனைவருக்கும் சுதந்திரப் போரில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்

சிக்கனச் சீரமைப்பு :

பண்டிதர் விளக்கம் !

புதுடில்லி, மே 31—

“சிக்கனச் சீரமைப்பு முறையினால், தொழில்களில் திறமை அதிகரித்து, உற்பத்தி பெருகும் என்பது உண்மையாயினும், அதனால் பலர் வேலையிழந்து தவிக்கும் நிலை ஏற்படுமானால் அது படுமோசமானதே;” என்றும்; “மக்கள் வேலை இழந்து திண்டாடுவதை சகித்துக்கொள்ள முடியாது,” என்றும், பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

இந்தியத் திட்டங்களுக்கு அமெரிக்க உதவி

புதுடில்லி, மே. 31—

ஸ்டீல் விநியோகத்தை அதிகரித்தல், சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் குடும்ப நிர்வாகக் கலை, கல்வி ஆராய்ச்சி, தொழில் நுணுக்க கல்வி நிறுவனங்கள் ஆகிய திட்டங்களுக்கும் இந்தியாவிற்கு அமெரிக்க உதவி கிடைக்குமென கூறப்படுகிறது.

இத்திட்டங்களுக்காக லட்சம் டாலர் அதாவது சுமார் ரூ. 3 கோடியே 60 லட்சம் கிடைக்குமெனக் கூறப்படுகிறது.

இத்திட்டங்களுக்காக இந்தியா செலவழிப்பது ரூ. 55 லட்சம் மட்டும்தானும்.

என்று கூறப்படுகிறது. இது கோவாக்காரர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

இவரது வேண்டுகோளின் நகல்கள் இராணுவ முகாம்களுக்கு எட்டிவிட்டன என்றும், இது குறித்த அவசர விசாரணை நடைபெறுவதாயும் தெரிகிறது.

கோவா மீது பொருளாதார நடவடிக்கை

இந்தியா கொள்கை பற்றி பண்டித நேரு

புதுடில்லி, மே 31—

“கோவாவில், அண்மையில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் மனவேதனை அளிப்பனவாயிருக்கின்றன.

“ஏராளமான இந்திய மக்கள் கோவா செல்வதை நாம் அங்கீகரிக்கவில்லை. தனிப்பட்ட முறையில் இந்திய மக்களில் சிலர் அங்கு சென்றிருக்கின்றனர். அவர்கள் கோவாக்காரர்களுடனும், மற்றவர்களுடனும் அங்கு செல்லலாம். இதனால், அடிப்படைக் கொள்கை எதுவும் பாதிக்கப்படவில்லை.

“இந்தியாவின் சமாதான வழிகளுக்கு உடன்பாடான வகையில் பொருளாதாரத் துறையில் அவசியமென நாம் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ள நமக்கு பூரண உரிமை உண்டு. அத்துறையில், நாம் ஏற்கனவே சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் இன்னும் சில எடுக்கலாம்.

“கோவா மக்களில் பெரும்பாலானோர், கோவா, இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டுமென விரும்புகிறார்கள் என்பது விவாதத்திற்குரியதல்ல.

“இந்தியர்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவர்களும் விரும்புகிறார்கள். கிறிஸ்தவ பாதிரிமார்கள் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. 40 சதவிகிதத்தினரான கத்தோலிக்க கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையினர், இந்தியாவுடன் கோவா இணைக்கப்படுவதை விரும்புகின்றனர்.

“புதுச்சேரிபோல கோவாவும் தனி உறுப்பாகக் கருதப்படும் என்று மத்திய சர்க்கார் தெளிவுபடுத்தியிருக்கிறது.

“கோவா இந்தியாவின் வேறெந்தப் பகுதியுடனும் இணைக்கப்படமாட்டாது; அது தனிப் பகுதியாகவே கவனிக்கப்படும்; அது தனியானதாகும்: அதற்குத் தனிச சரித்திரமும் உண்டு. இந்தியாவில், கோவாவின் தனித் தன்மை பாதுகாக்கப்படும். அங்குள்ள மக்களின் ஆலோசனை இன்றி எந்த ஒரு மாறுதலும் அவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது.

“கோவாவில் சிலசீர்திருத்தங்கள் செய்யப்படும் என்று கூறப்பட்டது. அந்தத் திருத்தங்கள், போர்ச்சுகலை விட ஜனநாயக சுதந்திரம் உடையதாக இருக்கும். போர்ச்சுகலுக்கே இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. அது கோவாவில் பிரதிபலிக்கிறது. போர்ச்சுகலுக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது என்பதை ஆராய்வது என் வேலையல்ல ஆனால், கோவாவில் என்ன நிலை என்பதை கவனித்தாக வேண்டும்.”

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமர் பண்டித நேரு பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

கொடுமையானது; கோரமானது !

‘காஷ்மீர் இளவரசி’ விபத்து பற்றி பண்டித நேரு

புதுடில்லி, மே 31—

“விபத்துக்குள்ளான ‘காஷ்மீர் இளவரசி’ பற்றி முழு விவரங்களும் கிடைத்த பின்னர், நஷ்டஈடு கோருவது பற்றி சர்க்கார் பரிசீலிக்கும்.”

“சமாதான காலத்தில், ‘காஷ்மீர் இளவரசி’ விபத்தைப் போன்று, ஒரு விமானத்தையும் அதன் பிரயாணிகளையும் அழிக்க வேண்டுமென்றே நடைபெற்ற முயற்சியைப் போல வேறெங்கும் நடைபெற்றதாகத் தெரியவில்லை”

“குறித்த காலத்தில் வெடிக்கும்குண்டு ஹாங்காங்கில் விமானத்திற்குள் வைக்கப்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமே இல்லை,” என்றும், “இம்மாதிரி சம்பவங்களால், விமானக் கம்பெனிகளுக்கும், பிரயாணிகளுக்கும் பாதுகாப்பற்ற உணர்வு தோன்றியிருக்கிறது; இந்தச் சம்பவம் மிகக் கொடுமையானது—அநியாயமானது இதற்குப் பரிகாரம் தேடியே ஆகவேண்டும்,” என்றும் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், விபத்து நேர்ந்த சமயத்திலும், நிதானம் இழக்காமல் வீரத்துடன் நடந்துகொண்ட விமான அதிகாரிகளை வெகுவாகப் பாராட்டினர்.

ஐந்து இலட்சம் பேருக்கு இராணுவக் கருவிகள்

மேற்கு ஜெர்மனியின் ‘நிலைமை’ மாறுகிறது?

‘சிறிது நாட்களில், 5 லட்சம் பேர்களுக்கு இராணுவக் கருவிகள் அளிக்கப்படுவதன் மூலம், மேற்கு ஜெர்மனியும் போருக்குத் தயாராகிறதா ?’ என்று கேள்வி எழுகின்றது.

2 லட்சம் பேர், 6 டாங்கி டிவிஷன்கள், 4 பான்சர் கைக்குண்டுகள் வீசும் டிவிஷன்கள், 2 போர் இயந்திர டிவிஷன்கள் ஆகியவற்றில் பணியாற்றக் கூடுமாம்.

க. அன்பழகன்

சுற்றுப் பயணம்

ஜூன் 1: மன்னார்குடி
2: அண்ணாமலைநகர்
3: நாட்டரசன் கோட்டை
4: இராமநாதபுரம்
5: காரைக்குடி

அணுகுண்டு சோதனைகளின் கொடிய விளைவு

பல தலைமுறைகளை பாதிக்கும்

அமெரிக்க விஞ்ஞானி எச்சரிக்கை

நியூஹேவன், (கனெக்டிகட்) மே 31—

“அணுகுண்டு, நீர்வளிக் குண்டு சோதனைகளினால் வெளிப்படும் கதிரியக்கம், இனி ஆயிரக்கணக்கான ஆண்டுகள்வரை பிறக்கும் குழந்தைகளைப் பாதிக்கும்.

“இந்தச் சோதனைகளின் கதிரியக்கம் மக்களைப் பாதிக்காது என்று அணுசக்திக் குழு கூறியிருப்பது தவறான கருத்தாகும்; அதற்கு ஆதாரம் ஏதும் இல்லை.

“இச்சோதனைகளின் கதிரியக்கம் புதியதாகப் பிறக்கும் குழந்தைகளை, ஏற்கனவே பாதிக்கத் தொடங்கியிருக்கிறது. இன்னும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் வரை இது நீடிக்கும்,”

—என்று, எல் சர்வகலாசாலையைச் சேர்ந்த கதிரியக்கத் துறைப் பேராசிரியர் பிராங்க்லின் ஹட்கின்சன் என்பவர் ஒரு வானொலிப் பேச்சின்போது இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியதின் சாரமாவது :—

“சென்ற மார்ச் மாதத்திற்குப் பிறகு பிறந்த 1,800 குழந்தைகள் சென்ற வசந்த காலத்தில் நடைபெற்ற சோதனைகளின் விளைவாக, அதிக மாறுதல்களுடன் பிறந்திருப்பதாக ஒரு நிபுணர் கூறியிருக்கிறார். இது மிகவும் குறைத்துக் கணக்கிடப்பட்டதாகும்.

“இந்த மாறுதல்கள் தெற்றெனத் தெரியமாட்டா. இருதயக் கோளாறு, காது செவிடு முதலிய உருவங்களில் இது தெரியும் செடிகள், பிராணிகள் இவற்றினைக் கொண்டு நடத்திய சோதனையில் இந்த மாறுதல்கள் தீமை பயப்பனவாகவே இருக்கின்றன என்பது வெளியாயிற்று. நம் குழந்தைகளை கதிரியக்கம் பாதிக்கும்படி விட்டால் நம்மால் கட்டுப்படுத்த முடியாத தீமைகளுக்கு பல தலைமுறைகள் வரை நம் பேரக் குழந்தைகளையும் அவர்களுடைய பேரப்பிள்ளைகளையும் உள்ளாக்கியவர்களாவோம்.”

‘உலுந்தர்’ போக்கை உதறித் தள்ள !

தென்னாப்பிரிக்க செனட் சபையை புனரமைக்கும் மசோதாவை ஆட்சேபிக்க உறுதி கொண்டுள்ள சுமார் 2000 ஐரோப்பியரல்லாதார், ‘முன்வைத்த காலை பின்வாங்காமல் போராடியே சாவோம்; மண்டியிட்டு வாழமாட்டோம்’ என்று சூளுரைத்துள்ளனராம்.

கலப்பு ஜாதியினரைப் பொது வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க பார்லிமெண்ட் இரு சபைக் கூட்டத்திலும் தேவையான ‘மெஜாரிட்டி’யைப் பெறவே செனட் சபையை இரு மடங்காக்கவிருக்கிறது, தென் ஆப்பிரிக்க சர்க்கார்.

தேயிலை ஏற்றுமதி வரி குறைகிறது

வெளிநாட்டு கம்பெனிகளுக்கு இந்திய சர்க்கார் பணிவு?

புதுடில்லி, மே 31—

தேயிலை ஏற்றுமதி வரியை நாளை முதல் 50 சதவிகிதம் குறைத்து இந்திய சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

ஏற்றுமதி வரி இப்போது ராத்தலுக்கு 8 அணுவாக விதிக்கடுவது, இனி 4 அணுவாகக் குறைக்கப்படும்.

‘சர்சார்ஜ்’ விதிக்கப் போவதாக இரண்டு திங்கள் முன்பு அன்னிய கப்பல் கம்பெனிகள் இந்தியாவிற்கு இறுதி எச்சரிக்கை தந்திருந்தன அதன்படி இன்று இறுதி நாளாயிருந்தும் அவ்வித அறிக்கை எதும் வெளிவரவில்லை.

‘சர்சார்ஜ்’ விதிக்கும் கப்பல்களை துறைமுகத் தொழிலாளர்கள் பகிஷ்கரித்துவிடுவதாக எச்சரிக்கை வந்திருக்கிறது என கல்கத்தாவில் உள்ள கப்பல் ஏஜண்டுகள் லண்டனிலும், நியூயார்க்கிலுமுள்ள தமது பிரதம அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கின்றனர்.

கழகக் கூட்டம்

★

சென்னை (3-வது வட்டம்)
கே. எஸ். பாண்டியன் திடலில்
(கல்லறை மைதானம்)
4—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: த. சேதுராமன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். வி. நடராசன்
விருதை ந. இராமசாமி
இசை: இரா. சண்முகம்

குறிப்பு: 24—5—55 அன்று, சென்னை கோகலே மண்டபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அன்று அவர்களின் சொற்பொழிவினை ஒலிபரப்பப்படும்.

பொதுக்கூட்டம்

1—6—55 இரவு 9½ மணிக்கு, சென்னை, சைளு பஜார் கங்கணு மண்டப மைதானத்தில், தோழர் கே.எஸ்.ஷெட்டி தலைமையில் நடைபெறும். ‘ஓட்டல் தொழிலாளரும், புதிய பாதையும்’ என்னும் பொருள் பற்றி தோழர்கள் வி. ஜி. ராமசாமி, ஏ. வி. குமார் கே. எஸ். ராமாராவ், டி. ஆர். கண்ணபிரான் ஆகியோர் பேசுவர்.

மந்திரி சபையை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற் சங்கத் தலைவர்களும், இதாரும் வானொலி மூலம், வேலை நிறுத்த முடிவு பற்றி அறிவித்து ஊழியர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு கோரினராம்.

வேலை நிறுத்தம் ஏற்கனவே இருந்த மந்திரி சபை ராஜினாமாச் செய்கிற நெருக்கடியையும் உண்டு பண்ணியது.

புதியதொரு மந்திரி சபை அமைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

யுத்த கல்வரமா ?

ஹாங்காங், மே 30—

ஹாங்காயிலிருந்து நுணுக்க, பொறி இயல் கல்லூரிகள், நகரிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் மாற்றப்படுவதற்கும், மூன்ரும் உலக யுத்தம் ஏற்பட்டால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளும் மும்முரமாய் நடைபெற்றுக்கொண்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராணய செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

இந்தியாவை இனி எவரும் தாக்கமாட்டார்களாம்!

பண்டிதரின் பெருமை

புதுடில்லி, மே 31—

“இந்தியாவை இனி எவரும் தாக்குவார்கள் என்ற பயம் எனக்கு இல்லை;

“இந்தியா ஒரு பெரிய ராணுவ பலமிக்க நாடாக விளங்க வேண்டுமென்பது அல்ல என் விருப்பம். இந்தியாவின் மீது தாக்குதல் ஏற்பட்டால், எதுநேரிடினும் அடிபணியாது, தடிகளாலும், கற்களாலும் எதிர்த்து தன்னைக் காத்துக்கொள்ளும் வலிமை மிகுந்ததாக இந்தியா விளங்க வேண்டுமென்பதே என் விருப்பம் இந்த உணர்ச்சி இன்று இந்தியாவெங்களும் ஏற்பட்டுவிட்டது,”

என்று, இந்தியப் பிரதமர் பண்டித நேரு இந்தியாவின் தற்காப்பு வலிமை குறித்து பெருமைப்பட்டுக்கொண்டதாக செய்தி ஒன்று கூறுகிறது.